News
aperin Ceylon
P. M. G. NO. H. A
69/300 of 1939.

சிவமயம்

இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-க்கு ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு ஆடி மீ உ ௨ (1947 ஜூலை 18 வெள்ளிக்கிழமை) [இல நூ.0

பிரார்த்தனை

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
முதாரதை மாதாளும் பாகத் தேந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியா ரடியா ரோடும்
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

—மணிவாசகர்.

இந்திய தேசீயக்கொடி

எப்படியாகஇருக்கும்?

இந்திய தேசீயக்கொடி ஒன்றை அமைப்பதற் கேற்ற ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கும்வண்ணம் இந்திய அரசியல் நிர்மாணசபை ஓர்உப சபையை நியமித்தது. இந்த உபசபையினர் இப்போது தமது ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

தேசீயக்கொடி, கட்சிபேத மில்லாமல், சமயபேத மில்லாமல் எல்லா மக்களுக்கும் உடன்பாடானதாக இருக்க வேண்டு மென்று ஷை நிருவாக சபையினர் அபிப்பிராயப்பட்டுப் பின்வரும் சிபாரிசுகளைச் செய்திருக்கின்றனர்.

1. இப்போது இந்தியக் காங்கிரஸின் திரிவர்ணக் கொடியையே சில மாற்றங்களுடன் தேசீயக் கொடியாக்க வேண்டும்.

2 முதல் காவி, இரண்டாவது வெள்ளை, மூன்றாவது கடும்பச்சை நிறமுமாக முக்கோடுகள் கொண்டதாக இக்கொடி யிருத்தல் வேண்டும்.

3. இப்போதுள்ள காங்கிரஸ் கொடியில் இராட்டினத்தின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது அதற்குப் பதிலாக, அசோக சாம்ராஜ்யத்தின் தலைநகரமாகிய சாரநாத்தில் காணப்படும் தூணில் உள்ள சக்கரத்தின் உருவம், நிருமாணிக்கப்படும்தேசீயக் கொடியிற் பொறிக்கப் படவேண்டும்.

4 இந்தச் சக்கரத்தின் நிறம் கருநீலத்தில் இருக்க வேண்டும்.

தேசீயக் கொடியைவிட, ஷை உபசபை, இந்திய அரசாங்கத்துக்கான முத்திரையையும் (ஸீல்) வகுத்திருக்கிறது. மேற்சொல்லிய சக்கரவடிவிலே அந்த முத்திரை இருக்க வேண்டு மென்றும்; அதில 'இந்தியக் குடியரசு' என்ற வார்த்தை பொறிக்கப்பட வேண்டு மென்றும் குறித்த சபை விதித்திருக்கிறது.

சமய நிலை

அதுவே இன்பவழி

'சமநிலை' யில்லாது இன்பங் காண வழியில்லை. இன்பம் என்பது இருதயத்தின் தன்மை: நம்முள்ளேயே நாமடையும் ஒரு பொருள் அது; நம்முள்ளத்துள் அதைப் பெறுவிடின், புறப்பொருள் எதுவும் நமக்குஅதைத் தரவியலாது. அவ் வின்பத்தை நம் மனத்துள் பெற்றிருப்பின் புறத்தே யிருந்து எவ்வளவு தடைகளேற்படினும நாம் அவற்றைக் கடந்து செல்லலாம். இதனை ரோமதேசத்து மார்க்கஸ் அரேலியஸ் என்னும் தத்துவ ஞானியார், "யாண்டும் இன்புற்றிரு. புறத்திருந்து உதவியை நாடாதே பிறரால் ஏற்படும் அமைதியை நிலையெனக் கொள்ளாதே. ஒரு மனிதன் பிறரால் திருத்தப்படாது தன்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

நீங்கள் செய்யவேண்டியன

[சுவாமி சிவானந்தர்]

உங்கள் உடம்பை நீரால் சுத்தப்படுத்துங்கள். உங்கள் மனதைச் சத்தியத்தாலும் தியானத்தாலும் புனிதப்படுத்துங்கள்.

●

உண்மையான துறவு உள்ளத்தில் இருக்கவேண்டும். உண்மையான சந்யாசம் மனநிலையாகும். ஒருவன் தனது மனைவி மக்கள் செல்வம் பூமி எல்லாவற்றையும் துறந்துவிடலாம். ஆயினும் அவன் மனத்தில் அவர்கள் மீது பற்றுள்ளவனாயிருந்தால் அவன் சந்யாசியாகமாட்டான்.

●

மோகமே சகல துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் கவலைகளுக்கும் மூலகாரணமாகும். அது மக்கள் உள்ளங்களில் ஆழமாகவே வேரூன்றியிருக்கிறது. வைராக்கியம் என்ற கூரிய கத்தியால் அதனை வெட்டிவிட வேண்டும்.

●

இந்த உலகத்தில் ஒரு செல்வன் திடீரென்று ஏழையாகிவிடுகிறான். பரம ஏழை திடீரென்று பெருஞ்செல்வனாய்விடுகிறான். செல்வம் ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் சென்றுகொண்டேயிருக்கிறது. மாறுதல் அடையாதது. ஆத்மா ஒன்றே. சகலமாறுதல்களையும் ஆத்மா மௌன சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் விதையாததை அறுக்க முடியாது. நீங்கள் நடுகிறபடி மரம் வளரும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அன்பு நெறி

அதுவே உண்மைச் சமயம்

[ஸ்ரீ இராமக்கிருஷ்ண விஜயம்]

(முற்றொடர்)

'யான்' 'எனது' என்னும் இருவகை நினைவுகளையும் மாய்த்தலே எவ்வித ஞானமார்க்கத்திலும் உயிராய் அமையும் நோக்கமாகும். இவைகளை அழித்தற்கே தனியிடம் சென்று தியானம் புரிதலும், ஈசனை வழிபடுதலும். ஈசனுக்காக எல்லாச் செயல்களையும் செய்யப் பழகும்போது 'தான்' எனும் எண்ணம் தணிகின்றது. உண்மையான தியானத்தில் அமரும்போதும் ஒருவன் தன்னைப் பெரிதும் மறக்கிறான். இதுபோலப் பிறரது நன்மையையே கருதி உழைப்பவனும் தன்னை எளிதாக மறந்துவிடுகிறான். நமது ஜனசமூகத்தின் தாழ்வையும் துயரத்தையும் நினைப்பவனது உள்ளத்தில் அவர்கள்மீது அன்பு தானாக எழும். அன்பிலார் எல்லாம் தமக்குரிமை என்றிருப்பர்; ஆனால் அன்புடையவரோ தமது நலத்தைக் கவனியாது, அனைத்தையும் ஈவார்; தமது உயிரையும் கொடுக்கத் துணிவார். அம்மட்டோ! தமக்கு அனைத்திலும் இனிய முத்தியை இழந்தாயினும் பிறர்நலம் பேணி வாழ்வார். தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழ்வை ஒப்படைக்க பகவான் புத்தரும் தமக்கு நரகம் வரினும் பிறர் உய்வடைவாராயின் அதுபோதும் என்று துணிந்த பகவான் இராமாநுஜரும் வாழ்ந்த நாடு இதுவன்றோ? இவர்கள் பெறாத பேறு ஒன்று இருந்ததோ? இருந்ததாயின் அது நமக்கும் வேண்டாம் எனத் தடையாது? தமது முத்தியை நினையாது பிறரது முத்திக்காக உழைப்பவர்க்குத் தானாகவே அம்முத்தி கைக்குவந்தமையும். இத்தத்துவமே சமூக சேவைக்கு அடிப்படைக் கருத்தாம். முத்தியைப் பெறும்பொருட்டு ஈசனை வழிபடுவாரிடத்தும் அதே நோக்கத்தோடு யோகம் பழகுவாரிடத்தும் ஒருசிறிது தன்னல வாசனை இருப்பதை மறுக்கமுடியாது; ஆனால் அந்த மிகவுயர்ந்த தன்னலத்தையும் அடிமுதலே போக்க முயலும் சிறப்பு இத் தொண்டுநெறிக்கே உள்ளதொன்றும். பிறர்க்கெனவாழும்பெருநோன்புடையார் மக்களை ஈசனாகவே நினைந்து பணிசெய்தலின், ஈசனது நினைவு அவர்களிடத்துக் குடிகொள்கின்றது; ஈசனுக்குச் செய்யும் பணியினும் பன்மடங்கு ஈசனை மகிழ்விப்பது, அவனது அருமை மக்கட்குச் செய்யும் பணி. ஆக சமூக சேவையால் தனக்குரிய கடமையும் ஈசனுக்குரிய கடமையும் செம்மையாக நிறைவெய்துகின்றன.

'நான்' என்ற நினைவு எழும்போது சாதாரண நிலையில் ஒருவனது உணர்ச்சி அவனது தேகமுழுவதும் வியாபித்துள்ளது; அதைக் கடந்து அப்பாற் செல்வதில்லை. இதன் காரணம் தன்னை உடலாக மதித்துள்ள அஞ்ஞானமே. 'நான்' என்பது உண்மையில் ஆன்மாவாகுமாயின், ஆன்மா, (அத்தவித நெறிப்படி) எங்கும் பரந்த மெய்ப்பொருளாயின், 'நான்' எனும் உணர்ச்சி எழும்போது உலக முழுவதும் 'தான்' இருக்கும் உணர்ச்சி எழவேண்டுமன்றோ? விசிஷ்டாத்வைத நெறிப்படிக்கும், ஆன்மாவின் ஞானம் இயல்பாகவே விபுவாயுள்ளதாயினும் அறியாமையால் சுருங்குகின்றது; அறியாமைநீங்கும் அளவிற்கு விரிவையடைகின்றது. அது முழு விரிவை அடையும்போது ஒருவன் மன்னுயிர் முழுவதையும் தன்னுயிராக உணர்வான். பூரண ஞானம் பெற்றவன் எல்லா உயிர்களின் இன்ப துன்பங்களையும் தன்னுடையனவாக உணரக் கூடும்; அந்நிலையில் துயரத்தை எவ்விடத்துக் காணினும், அதை ஒழிக்க 'உடுக்கை யிழந்தவன் கைபோல' ஆடை நெகிழும்போது கை தானாகவே அதைச்சரிப்படுத்துவதுபோல) ஞானி இயல்பாகவே முற்படுவான். தன்னலத்தைநாடி ஓடும் தனதுசக்திகளையெல்லாம் பரந்த சமூக நலமென்னும் வாய்க்கால் வழியாக ஓடும்படி ஒருவன் திருப்பப் பழகுவானாயின், நாளடைவில் அவனது உணர்வு மேலும்மேலும் பரந்து விரிந்து முடிவில் மனித சமூகம் முழுவதும் பரவுமன்றோ? இதனால் சமூக சேவை உயர்ந்த ஞான நிலைக்கு உய்க்கும் சாதனமாதல் தெளிவாகும்.

ஞானக் கொள்கைகள் அனுபவ உண்மைகளாக மாறினாலன்றி வாழ்க்கைக்குப் பயன்படா. ஆதலின் நமது நாட்டு ஜனசமூகம் முழுவதும் பரந்த 'நான்' எனும் உணர்வை நமது இலக்கியமாகக் கொண்டு, அக் காட்சியிலே சிந்தையை நிலைநாட்டவேண்டும்: தன்னல ஆசையைத் துறத்தலும், பரந்த சமூக நலனுக்கு நம்மை ஆட்படுத்தலும் அப்போது பற்றற்குரிய சாதனங்களாகும். ஞானத்தின் சுருக்கத்தையும் தன்னல விருப்பையும் உண்டுபண்ணும் எதனையும் விஷமெனவெறுத்தல் அவசியமாகும். பூரணத் தன்னலமறுப்பு வடிவமான இப் பூரண சமூகசேவையில் ஓர் அருமையான நயம் உள்ளது: அது யாதெனில் இந்த நெறியைப் பின்பற்றுபவன் முடிவில் வரம்பின்றி விரிந்த ஞான உணர்வைப் பெறும்போது, சுய முத்தியின் இலக்கியமும் சமூக சேவையின் இலக்கியமும் ஒன்றே என்பதை அனுபவத்திலே உணர்கின்றான். அவன் இன்னும் பக்தியின் உயர்ந்த இலக்கியமும் சமூக சேவையின் இலக்கியமும் ஒன்றே என்பதையும் காண்கிறான். சமூகத்திலுள்ள ஒவ்வோர் உயிரையும் ஈசனது வடிவமாக எண்ணித் தொண்டு புரிபவன் முடிவில் எல்லா உயிர்களிடத்தும் ஒரே பரம்பொருளாகிய ஈசன் விளங்குவதையும் அனைத்துயிர்களும் ஈசனது உடலாவதையுங் காண்கின்றான். இதுவே பக்தி நெறியின் உயர்ந்த காட்சியாகுமன்றோ? தியானத்தின் வாயிலாக ஒருவன் இக்காட்சி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துபர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஸு ஆடிமீ உ உ வெள்ளிக்கிழமை

மண்ணெண்ணெய்ப் பஞ்சம்

மண்ணெண்ணெய்க்காகியகட்டுப்பாடுதவிர்க்கப்பட்டுவிடுமென மக்கள் காத்திருந்த இந்தச் சமயத்திலேயே இங்கு மண்ணெண்ணெய்ப் பஞ்சம் அதிகப்படலாயிற்று; சென்ற சில வாரந்தொடக்கம் இற்றைவரையில் இங்குள்ள மக்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் இராப்பொழுதில் விளக்கெரித்தற்கு மண்ணெயின்றிப் படுங் கஷ்டம் அதிகமெனலாம்; சங்கக்கடைகளிற் பெரும்பான்மையும் கூப்பனுக்குரிய விகிதமான மண்ணெயைப் பெற்றாலும், கூப்பனுக்கு அரிசி மா முதலியன கொடுக்கப்படும் "சில்லறை"க் கடைகளிற் கூப்பன் விகித மண்ணெயைக் கிரமமாக வாங்கிகொள்ளுதல் கஷ்டமாயிருக்கிறதென இங்குள்ள ஏழை மக்கள் முறையிடுகிறார்கள்; மண்ணெண்ணெய் தரும்படி குறித்த சில்லறைக் கூப்பன் கடைகள் சிலவற்றில் ஏழைமக்கள் பணத்தையுங்கூப்பனையுங் கொடுத்துக் கேட்டால் "எண்ணெய் வரவில்லை" என்று ஒரே வாக்கியமாகச் சொல்லி மூடித்துவிட்டு வாளா விருக்கிறார்கள் கடையிலுள்ளவர்கள்; இதனால் ஏழை மக்கள் இந்த இராக்காலத்திலே, இராக்காலத்திலும் அமாவாசைப் பட்சத்தோடு கூடிய இரவிலே வீட்டில் விளக்கேற்றுவதற்குத் திண்டாடுகிறார்கள்; மண்ணெயில்லாவிட்டால் தேங்காய் நெய் கொண்டு விளக்கேற்றலாமேயென்றால், தேங்காய்நெய் பெய்து ஏற்றுவதற்காகிய விளக்குக்கள்தாம் இக்காலத்தில் வீடுகளி லில்லையென்பது எவருமறிந்த இரகசியமல்லவா?

மேலும், "பெர்மிற்" எனப்படும் அநுமதிப் பத்திரம்பெற்று மாசத்திற் கொருமுறை மண்ணெண்ணெய் பெற்று உபயோகிப்போர் விஷயத்திலும், சென்ற மாசம் மண்ணெண்ணெய் நூற்றுக்கு ஐம்பது விகிதம், அதாவது ஒரு "கலன்" பெறுவோருக்கு அரைக் கலனென்ற விகிதங் கொடுக்கப்படலாயிற்று; இந்த மாசத்திற்காகிய "பெர்மிற்" மண்ணெய் இற்று 18-ந் திகதி ஆகியும் இன்னுங் கிடைத்தபாடில்லையாம். மக்களுடைய நித்திய வாழ்க்கைக்கு இன்றியமையாத மண்ணெய் வழங்குதல் இப்படிக் கிரமமில்லா தொழியுமானால் இங்குள்ள மக்கள் இராக்காலத்தில் என்செய்வார்களென்பதை மண்ணெய்க் கட்டுப்பாட் டதிகாரி சிந்தித்து ஆகவேண்டிய ஒழுங்குகளை இன்னே செய்தல் வேண்டும்.

இனி, இப்பட்டின வாசிகளுள் மின்சார வெளிச்சத்தைத் தத்தம் வீட்டிற்கு இடுவித்துக் கொள்ளத்தக்க இயல்புடையவர்கள், மண்ணெய் விஷயமாக இவ்வாறு சங்கடப்படுவதை விடுத்து, மின்சார வெளிச்சத்தையே யிடுவித்துக் கொள்ளலாமேயென்றால், யாழ்ப்பாணப் பட்டினத்திலே பட்டின சங்கத்தார் மூலம் ஒருவர் தம் வீட்டிற்கு மின்சார வெளிச்சம் பெறவேண்டுமானால், அவர் விண்ணப்பப் பத்திரத்தை அனுப்பி விட்டு மாசக்கணக்கில் விரதமிருந்து தவங்கிடந்து முயற்சி செய்தாலும் வீட்டிற்கு மின்சார வெளிச்சம் விரைவில் வரப்போவதில்லை யெனலாம்; ஏதும் படக்காட்சிச் சாலை புதிதாய் அமைக்கப்படினும் அதற்குமாத்திரம் வெளிச்சம் விசேஷமாக உதவப்படும்; காரணம் பட்டினசங்கத்தார் படக்காட்சிச் சாலைகளிற் கொண்ட அபிமானமென எண்ணிவிடவொண்ணாது; படக்காட்சிச்சாலைகளிற் காட்சிகள் குறைவில்லாமல் நடைபெறுமானால், எங்கள் பட்டின சங்கத்திற்கும் அவற்றால் அதிக வருவாயுண்டென்பதாம்.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோடு

சென்றவாரம் ஆரம்பமாகிய யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் இதுவரை நாலு வழக்குகள் விசாரணை செய்யப்படிருக்கின்றன.

முதலாவதாக புங்குடுதீவைச் சேர்ந்த கே. இராசையா என்பவர் அவ்வூர் பொன்னையா காசிப்பிள்ளை, பொன்னையா சுப்பிரமணியம்என்பவர்களைக் கொலைசெய்ய எத்தனித்தனர் என்ற வழக்கு நீதியரசர் ஸ்ரீ லி நாகலிங்கம் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. முடிக்குரிய நியாயவாதி மிஸ்ரர் வினசென்ற தாமோதரம் வழக்கை நடத்தினார் எதிரிக்காக நியாயவாதி திரு. எ. பாலசுந்தரம் ஏற்பட்டார். விசாரணை முடிவில் எதிரிகள் குற்றவாளியெனக் கண்டு 2 வருஷக் கடுங்காவற் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார்.

நெடுந்தீவைச் சேர்ந்த சவுரிமுத்து கபிரியேல் என்பவரைக்கொலைசெய்ய எத்தனித்ததாக அவ்வூர் சின்னதம்பி வேலுப்பிள்ளை குற்றம்சாட்டப்பட்ட வழக்கு இரண்டாவதாக விசாரணை செய்யப்பட்டது எதிரிக்காக நியாயவாதி ஏற்படவில்லை விசாரணை முடிவில் யூரிகள் அபிப்பிராயப்படி, நீதியரசர் எதிரிகளை நிரபராதி எனக்கண்டு விடுதலை செய்தார்.

தாவடியைச் சேர்ந்த சின்னராசா என்பவரைக் கொலைசெய்த வழக்கில் எதிரி விடுதலையடைந்தார்.

நாலாவதாக, சிவராத்தினம், கனகரத்தினம் என்னும் இருவர், கொக்குவிலைச் சேர்ந்த நடராசா என்பவரைச் சென்ற 26-1-46-இல், எண்ணூர்பண்ணை தட்டாதெருச் சந்தியில் கத்தியாற் குத்திக் கொலைசெய்தனர் என்று குற்றம்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் எதிரிகளுக்காக ஏற்பட்டார். விசாரணை முடிவில், யூரிமாரின் அபிப்பிராயப்படி, நீதியரசர் எதிரிகளை நிரபராதிகள் எனக்கண்டு விடுதலை செய்தார்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—23)

பிரயாணம்

கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குக் கப்பல் புறப்படுகின்றதென்ற செய்திகேட்டும் புறப்படுந் தேதியையும் கொழும்பு மலாய்நாட்டிற்கிடையேயோடுங்கப்பல்களுக்கு "ஏஜன்ற்" (பிரதிநிதி) ஆகவுள்ள அந்த நாதனென்பவர் முந்தியே வந்து கண்ணகியம்மை வீட்டில் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணத்தி லிருந்து தக்க குடும்பத்துப் பெண்களும் பிள்ளைகளும், அந்தக் கப்பல்மூலமாகச் சிங்கப்பூருக்குப்புறப்படுகிறார்களெனவும், தாமும் அந்தக்கப்பலில் சிங்கப்பூருக்குப் பயணஞ் செய்யவேண்டிய கருமமுண்டெனவும், ஆனதால் ஆண் துணையில்லாமலும் பல சௌகரியங்களோடும் பிரயாணஞ் செய்யலாகுமெனவும், அந்த நாதன் சொல்லிவிட்டுப் போயினார்; புறப்படவேண்டிய தினத்தன்று கண்ணகியம்மை மகள் சிவபாக்கியம், பாக்கியலட்சுமி, இராமன் என்னும் பெயருடைய ஒரு வேலைக்காரனாகிய இத்தனை பேரும் புறப்பட்டார்கள். பாக்கியலட்சுமியின் தாயாகிய சிவகாமியம்மையும் அவர்களைச் சேர்ந்த சிலரும் கண்ணகியம்மை சிவபாக்கியமென்னு மிவர்களின் சுற்றமித்திரரும் புகைரதஸ்தானத்திற்கு வந்து அந்த நால்வரையும் புகைரதத்திலேற்றிப் பிரியாவிடை பெற்றுப் பயணமனுப்பினர். அவர்கள் நால்வரும் அடுத்தநாட் காலை கொழும்புப் புகைரத ஸ்தானத்தில் இறங்க, முந்தியே அவர்கள் வரவை எதிர்பார்த்துப் புகைரதஸ்தானத்தில் வந்து நின்றவர்களாகிய கண்ணகியம்மையின் சுற்றத்தவர்கள் அந்நால்வரையும் ஒரு மோட்டா ரதத்தில் ஏறச்செய்து, தாங்களும் இன்னொரு மோட்டார் ரதத்தில் ஏறிக்கொண்டு அவர்களைத் தங்கள் வாசஸ்தானத்துக்கு அழைத்துக்கொண்டு போய், கப்பல் புறப்படுதற்கு இரண்டு நாள் இடமையினால் அந்த இரண்டுநாளும் வேண்டியவாறு உபசரித்தனர். கொழும்பு நகரத்தின் சிறப்பையும் அந்நகரிலுள்ள விசேஷங்களையும்கண்ணகியம்மை சிவபாக்கியம் பாக்கியலட்சுமி என்னும் மூவருக்கும், அங்குள்ள அவர்களின் உற்றத்தவர்கள் மோட்ட ரதமூலமாக அழைத்துக் கொண்டுபோய்க் காட்ட, கண்ட இவர்களும் அற்புதமடைந்தார்கள். மூன்றுநாட் கப்பல் புறப்பட, இந்நால்வரையும் அவர்கள் நீடித்த பயணத்திற்காகவேண்டிய உணவுப்பொருள் முதலியவற்றையும் ஆயத்தம் பண்ணிக் கொடுத்து, அவர்களைக் கப்பலிற் கொண்டுபோய் ஏற்றிவிட்டு, அவர்களிடத்து விடை பெற்றுக் கொண்டு தம் வாசஸ்தானத்திற்கு மீண்டார்கள்; கப்பல் குறித்த நேரத்திற் புறப்பட்டது; அக்கப்பலிலுள்ள பிரயாணிகளுள் ஒரு பெருந்தொகையானவர்கள் யாழ்ப்பாணத்தவர்களாகவே யிருந்தார்கள்.

"அந்த அச்சந்தான் இது"

கப்பல் கடலிற் போம்போது, அக்கப்பலி லுள்ள பிரயாணிகளுள் அநேகர் மகிழ்ச்சியுடன் காணப்பட, சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் மாத்திரம் அச்சத்தோடு கூடியவர்களாகக்காணப்பட்டார்கள். பிரயாணிகளுட் பலர் கப்பலைப்பற்றியும் அது ஓடுங் கடலைப்பற்றியும், தாங்கள் முன்னர்க் கப்பற் பிரயாணஞ் செய்துள்ள அநுபவத்தைப்பற்றியும், பிற கருமங்களைப்பற்றியும் பரஸ்பரம்கலந்து பேசிக்கொண்டிருப்ப சிவபாக்கியமும் பாக்கியலட்சுமியும் மாத்திரம் வார்த்தையாடாதவர்களாய் வெருட்சியோடுகூடிய முகத்தினராய்க்காணப்பட்டனர். அவர்களிருவரும் ஒரு புறமாக விருக்கும்போது, கண்ணகியம்மாள் உறங்கிக் கிடந்தாள்; சமீபத்தில் எவருமிலர். இராமன் கப்பற் பிரயாணஞ் செய்த அநுபவமுடையவனாதலின் கப்பலிலே தான் போகக்கூடிய இடங்களிலெல்லாம் போய்த் திரிவான்: குறிக்கப்பட்ட நேரத்திற்றான் இவர்களிருக்குமிடத்திற்கு வருவான்; அவனும் அந்த நேரத்திலே இவர்களுக்குச் சமீபத்திலில்லை; அப்போது பாக்கியலட்சுமி சிவபாக்கியத்தைப் பார்த்து, "அக்கா, என்ன ஞாயமென்று தெரியவில்லை; கொழும்பு வந்து சேர்ந்தநாள்தொட்டு உண்டானபயம் வரவர அதிகப்படுகிறதேயல்லாமல் குறைந்தபாடில்லை; எனனையறியாமல் என்மனம்பயப்படுவதற்கு ஏதுவென்ன அக்க, எனக்கு ஒன்றும் புலப்படவில்லையே" என்று கேட்டாள்; சிவபாக்கியமும் சிறிதுநேரஞ் சிந்தித்துவிட்டு, பாக்கியலட்சுமியை அன்புடன் நோக்கி, "தங்காய் உமக்கு மாத்திரமென றெண்ணிக்கொள்ளாதீர்: எனகும் கொழும்பிற்கு வந்துசேர்ந்தபோது தொட்ட பயம் இப்பொழுது அதிகப்பட்டுவருகிறது; நான் அதை உமக்குக் காட்டாமலே உம்முடன் ஊடாடி வருகிறேன்; இங்கே நாங்கள் பயப்படவேண்டிய காரணம் ஏதுமில்லை தங்காய், பெண்களாகிய எங்களுக்கு மடமாணம் அச்சம் பயிர்ப்பெனப்படும் நான்கு குணங்களுண்டென்று நூல்களிற் சொல்லப்பட்டிருக்கிறதே; அந்த அச்சந்தானே இப்பொழுது எங்களைப் பிடித்துள்ளதென்று யோசிக்கிறேன், தங்கைச்சி" என்றாள்; "யோசிப்பதென்ன அக்கா, அந்த அச்சந்தான் இது; இதிற் சந்தேகமில்லை. பெண்பாலார் முன்னர்த்தாங்காணாத ஒருபெரும் பொருளைக் காட்சியைக் காணும்போதும், அந்நியரைக் காணும்போதும், காரணமில்லாமல் அவருள்ளத்தி ல பிறக்கும் பயந்தான் அச்சமென்று புதகங்களிற் படித்திருக்கிறேன்; இதனை அது என்றுதான் நினைக்கிறேன்" என்றாள் பாக்கியலட்சுமி; கேட்ட சிவபாக்கியமும், "நீர் சொல்வதுதான் நிசம்; இப்பொழுது நாங்கள் அச்சத்தின் இயல்பை யறிந்துகொண்டே மாதலால், தங்காய் எங்கள் அகத்திலே அச்சமிருந்தாலும் புறத்தே காட்டாமல் நடந்துகொள்ள வேண்டும்" என்று சொல்லி ஒருவாறு மகிழ்ச்சியோடிருப்ப, பாக்கியலட்சுமியும் அப்படியேயிருந்தாள்; இரண்டு தினங்கள் செல்வதற்கிடையில் பிரயாணிகளுட் பல பெண்கள் அவர்களுடன் அறிமுகமாகி அன்பு பாராட்டி வருவாராயினர்; இதனால் அவர்களுக்குள்ள கப்பற் பிரயாணச் சிரமம் புலப்படாதொழிந்தது

"கேட்டதற்கு நாலுகாரம்"

மேல்வகுப்பிற் பிரயாணஞ் செய்வோர் அந்திநேரத்திலே கப்பலின் மேற்றட்டிலே கடற்காற்றைவிரும்பி வந்திருப்பது வழக்கம்; கண்ணகியம்மை சிவபாக்கியம் பாக்கியலட்சுமியாகிய இம்மூவரும் இடையிடையே மேற்றட்டிலே வந்து கடற்காட்சியைப் பார்த்துக்கொண்டிருப்பது முண்டு; அந்த நேரத்தில் இராமனும் அவர்களுக்குச் சமீபமாக வந்து நிற்பான்; ஒருநாள் சிவபாக்கியம் தேகத்தில் அலுப்படைந்தமையால் மேலே வராது தங்கள் "காம்ப"றையிற்றானே படுத்துக்கொள்ள, கண்ணகியம்மாளும் பாக்கிய இலட்சுமியும் மேற்றட்டிலே வந்திருந்தார்கள்; இராமனும் அவர்களுக்கு அயலாக உலாவிக்கொண்டு திரிந்தான்; அவன் இடையிற் போய்ச் சிவபாக்கியத்தையும் பார்த்துச் சிவபாக்கியம் அசைவற நிற்றலை செய்வதைக் கண்டு

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயகம் என்றால் என்ன?

இலங்கையில் நடப்பது யாது?

தலைவர்கள் செய்யவேண்டிய கடன்

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்]

ஜனநாயகம் என்றால் என்ன? ஜனங்களால், ஜனங்களுக்காக நடக்கும் ஆட்சியே ஜனநாயக ஆட்சி என்பர். அத்தகைய ஓர் ஆட்சி நம் நாட்டில் நிலவ வேண்டுமானால், ஜனங்கள் அரசியற் பிரச்னைகளில் நன்கு தெளிந்து, தமக்கு உசிதமான பிரதிநிதிகளைத் தெரிந்து அரசியல் மன்றத்துக்கு அனுப்பச் சுதந்திரமும், சாவகாசமும், சந்தர்ப்பமும் அளிக்கப்படுதல் வேண்டும். ஆனால், இன்று அரசியற் றலைவர்கள் என முனவருவோர், இந்தச் சுதந்திரத்தையும், அவகாசத்தையும், சந்தர்ப்பத்தையும் பொதுஜனங்களுக்களிக்க விடுகின்றனரா? சீர்திருந்தியநாடுகளிலே, ஜனநாயகஆட்சி நிலவும் பிரதேசங்களிலே பொதுஜனங்களின் நன்மையையிட்டே ஜனத்தலைவர்கள் எனப்படுவோர் முன்வருகிறார்கள். ஆனால், துர்அதிர்ஷ்டம் பிடித்த இலங்கையின் நிலைமை முழு மாறானது. ஜனத்தலைவர்கள் என முன்வருவோரின் நன்மைக்காகவே பொதுஜனங்கள் இங்கே ஆண்டவனாற் சிருஷ்டி செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினும் பொருந்தும். தலைமைப்பதவி என்பது ஒருவர் தமக்குத்தானே சூட்டிக்கொள்வதால் வரமாட்டாது. அப்பதவி அவரைத்தானே அடையவேண்டும் அதற்குத் தியாகம் வேண்டும். தியாகம் என்னும் அக்கினியில் முளைத்தெழுபவரே உண்மைத் தலைவர்களாவர்

○

உண்மைத் தலைவர்கள்

தியாகக்கனலில் எழுந்துள்ள தலைவர்கள் இன்று எத்தனைபேர் எமது இலங்கையில் உளர். தலைவர்களுக்குரிய லட்சணம், அரசியல் மன்றங்களிற பங்குபற்றுவதுதான் என்பது இவர்கள் கொண்டுள்ள கொள்கை. தேர்தற்காலங்களில்தான் இவர்களின் தேசசேவையும், சமூகசேவையும் தம்பட்டமடிக்கப்படுகின்றன. இன்று எங்கள் இலங்கை பொருளாதாரத் துறையில் மிகவும் கேவலநிலையை எய்தியிருக்கிறதென்றால், அரசியல் விஷயத்தில் மிகவும் பிற்போக்கான நிலையில் உளதென்றால், அதற்குக் காரணம், தேர்தற்காலங்களில் மாத்திரம் தோற்றி வீட்டுக்குவீடு படலைக்குப் படலை திறந்து பல்லெலாம் இளிக்காட்டி, பரிவால் முகத்தினைக் காட்டி, சொல்லெலாம் சொல்லிநடித்து, துணைக்கரம் விரித்து நிற்கும் "ஜனத்தலைவர்"களின் மலிந்தமையே என்க. வாக்குரிமை என்பது பொதுஜனங்களுக்களிக்கப்பட்டிருக்கும் மதிப்பற்ற பொக்கிஷம். ஜனநாயக ஆட்சி ஓர் நாட்டிற் செவ்வனே நடைபெறுதற்கேற்றதிறவுகோல் அது. அதனைப் பிரயோகிக்கும் பொதுஜனங்கள், முகமன்பாராட்டாது செய்ய அவர்களுப் பூரண சுதந்திரம் அளிக்கப்படல் வேண்டும். எந்த அபேட்சகராவது சரி, அவர் ஓர் வாக்காளரை நோக்கி "உன் வாக்குச சம்மதத்தை எனக்கே தரவேண்டும்" என்று கேட்பாரானால், அல்லது, அதனைப் பெறுதற்கு வேறும பல தந்திரங்களைக் கையாள்வாரானால், பயமுறுத்தி அதனைப்பெற முயற்சிப்பாரானால், அவர் ஓர் ஜனப்பிரதிநிதியாக வர யோக்கியமற்றவர், உரிமையற்றவர் என்பதே எனது சித்தாந்தம்.

○

இன்றைய கட்சி

இலங்கையில் தோற்றியுள்ள அரசியற் கட்சிகள் போதாவென்றபோலும், மிஸ்டர் ஏ மிவனபால என்பவரும், மிஸ்டர் டபிள்யூ ஏ. பர்ணாந்து என்பவருமாகச் சேர்ந்து இன்னோர் தரசியற் கட்சியை அமைக்கத் திட்டம் வகுத்திருக்கின்றனர் என்று ஓர் செய்தி கூறுகிறது இந்தப் புதிய கட்சி "சர்வாதிகாரத்தவத்தை அடிப்படையாகக்கொண்ட ஐக்கியதேசியக்கட்சிக்கும், சர்வநாசத்தை மூலாதாரமாகக் கொண்ட சமதர்மக்கட்சிக்கும் இடையில்' உள்ளதாம். இந்தக் கட்சியிற் சேரும்படி, வடமாகாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக முன்வந்துள்ள மூவருக்கு அவசர அழைப்பும் வந்திருக்கிறது என்று அறிகிறேன், "தென் இலங்கையிலே, தமிழ்க்காங்கிரஸ் ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் எனப் பெயர் எடுத்திருக்கிறது. இந்த வகுப்புவாத ஸ்தாபனத்தை ஆதரிக்கும் சிறுபான்மையினரை, பெரும்பான்மையினர் சந்தேகத்துடன் நோக்குகின்றனர். எனவே, இந்தத் தமிழ்க்காங்கிரஸ் ஸ்தாபனத்தை விடுத்து நீவிர் இப்புதிய கட்சியுடன் சேருவது நலம்" என்று அந்த அழைப்புப் பத்திரம் கூறுகிறது. அந்த அழைப்புக்கு திருவாளர்கள் P. A. நாயகம், சிவபாதசுந்தரம் என்பவர்கள் கையொப்பமிட்டிருக்கின்றனராம்!

○

காரணம் என்ன?

நாம் அறிந்த அளவில், இந்த இலங்கையில் எத்தனையோ அரசியல் ஸ்தாபனங்களும், கட்சிகளும் தோன்றி மறைந்துவிட்டன. அவற்றில் பல நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. மீந்திருப்பனவற்றிற் பல, தசையில்லாக் கநகாள உருவம்போல இருக்கின்றன. இக் கேவல நிலைக்குக் காரணம், இந்த ஸ்தாபனங்களையும், கட்சிகளையும், இயக்க முன்வந்தோரின் சுயாபிமானமே என்க. அரசியல் மன்றம் ஒன்றுதான் தேசசேவைக்கு மார்க்கம் எனக் கருதி, அம்மன்றத்துக்குள்ளே எவ்வாறு புகலாம் எனபதற்காக இரவும் பகலும் சூழ்ச்சி செய்யும் அரசியல்வாதிகள் கையில் அகப்பட்டமையினால்தான், நல்ல நோக்கங்களுடன் உருவான அநேக ஸ்தாபனங்கள் இன்று மறைந்துவிட்டன. பொதுமக்களுக்கு உண்மையான சேவை செய்யவேண்டுமானால், அதன்பொருட்டு அரசியல் ஸ்தாபனங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பது பிழையான நோக்கம் தேசசேவைக்கு அரசியல் மன்றங்களும் ஓர் சாதனம். ஆனால் அதனைக் கைப்பற்றுவது மாத்திரம் பொதுஜன சேவசரின் லட்சியமாக இருக்கக்கூடாது. ஜனங்களுக்குச் சேவை செய்தற்கு வேறும் எத்தனையோ வழிகளுண்டு. நாட்டிலே மக்களின் அறியாமையைப்போக்க கல்விச் சாலைகளை நிறுவலாம். கைத்தொழில்களை நிறுவி மக்களிடையே தொழிலின்மையைப் போக்கலாம்; கமத்தொழிலை அபிவிருத்தி செய்து மக்களின் பசிப்பிணியைப் போக்கலாம் ஜனங்களுக்குச் சிக்கன வாழ்க்கையின் அவசியத்தை வற்புறுத்தி, ஐக்கியசங்கங்கள் நிறுவி அவற்றின்மூலம் அவர்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்தலாம். சமயவிஷயமாக எங்கள் ஆலயங்களில் நடக்கும் அநாசாரமான ஆடு கோழி வெட்டுதல், தாசியர் நடனம் என்பவற்றைப் போக்க வழிவகைகள்தேடலாம். மதுவிலக்குக்காக உழைக்கலாம்; சமூகசேவைச் சங்கங்கள் உண்டாக்கிக் குற்றங்கள் பரவுவதைத் தடுக்கலாம் மக்களுக்கு உலக அறிவு புகட்டும் வாசகசாலைகளை ஊர்கடோறும் ஸ்தாபிக்கலாம். இப்படியே இன்னும் அடுக்கிக் கொண்டேபோகலாம். இந்தியாவிலுள்ள தேசிய காங்கிரஸ்மகாசபைக்கு இத்தகைய பலம் வந்தமைக்குக் காரணம், அது அரசியல் மன்றங்களிற் செய்த "சேவை"களினால் அல்ல அவற்றுக்கு வெளியே நின்று ஆற்றிய புருருத்தாரண வேலைகளினாலேயே என்க, இந்த இலங்கையில் தோன்றியுள்ள தலைவர்களில் எத்தனைபேர் இத்தகைய கைங்கரியங்களில் ஈடுபட்டவர்கள்? இப்போது ஈடுபட்டிருக்கின்றனர்?

○

தலைமைப்பதவி பெறும் வழி

பாராளுமன்றப் பதவிகளைக் கைப்பற்றும் மனப்பான்மை நம் "தலைவர்களை" விட்டு அகலவேண்டும். அவர்கள் நாட்டின் புருருத்தாரண வேலைகளில் — உண்மையான ஆக்கவேலைகளில் ஈடுபடவேண்டும். மாரிக்காலத்திற் புற்றீசல்கள் போலவும், கோடைக்காலத்து மயிர்க்கொட்டிப்புழுக்கள் போலவும், தேர்தற்காலத்தில் மாத்திரம் "தலைவர்"களும், "உபதலைவர்"களும், கிளம்பும் சம்பிரதாயம் இந்த நாட்டைவிட்டு ஒழியவேண்டும். "தலைவர்கள்" உண்மையில் தலைவர்களாகமுன், பொதுஜன ஊழியராகத் தம்மை அர்ப்பணம் செய்து தொண்டாற்றவேண்டும். அப்படித் தொண்டாற்ற தலைமைப்பதவிதானே வந்தடையும்.

ஆங்கில-எகிப்திய பிணக்கு

எகிப்து தனக்கருகேயுள்ள சூடான்பிரதேசம் தன்னுடன் இணைக்கப்படவேண்டுமென்று கேட்கிறது. இப்பிரதேசம் எகிப்துக்கே சொந்தமானது ஆனால் பிரிட்டிஷார் அதனைப் பிரித்துத் தம் பரிபாலனத்தில் வைத்திருக்கிறார்கள். சூடான் மக்கள் சுயேச்சையை விரும்புகிறார்கள்; அவர்கள் தமக்கு எது விருப்பமோ, அதனைச் செய்யவிடுவதே மேல் என்று பிரிட்டிஷார் பிடிவாதமாக நிற்கிறார்கள். சுருங்கக் கூறுங்கால், இந்தியாவிலே பிரிட்டிஷார் ஆடிய அதே பிரிவினை நாடகம் எகிப்திலும் இன்றும் நடிக்கப்படுகிறது. பிரிட்டிஷாரின் இந்தச்செயலுக்கு விரோதமாக எகிப்தியர் ஐக்கியதேச ஸ்தாபனத்துக்கு மநுச்செய்திருக்கிறார்கள். இப்பிரச்னை இன்னும் சில தினங்களில் ஆலோசிக்கப்படவிருக்கிறது. அந்தச்சமயத்தில் தத்தம் கட்சியை எடுத்துரைக்கவல்ல பிரதிநிதிகளை பிரிட்டிஷ் அரசினரும், எகிப்திய அரசினரும் ஐக்கியதேச ஸ்தாபனத்துக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

ஐரோப்பாவுக்கு மார்ஷல் திட்டம்

யுத்தத்தினால் மிகவும் கூனிநிலையடைந்திருக்கும் ஐரோப்பியநாடுகளுக்கு உதவி செய்ய அமெரிக்கா ஓர் திட்டம் வகுத்து இருக்கிறது. அதனை அமெரிக்க அந்நியநாட்டுமந்திரி மார்ஷல்வகுத்தபடியினால் அது மார்ஷல் திட்டம் எனப் பெயர்பெற்றது. இத்திட்டத்தை கமுலுக்குக் கொண்டுவந்து ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி செய்வது அமெரிக்கா, பரந்த நோக்கத்தினால் அல்ல, தனது (ரூஷியாவின்) செல்வாக்குப் பரவவிடாமல் தடுப்பதற்கே என்று ரூஷியா கருதி, அத்திட்ட ஆலோசனையிற் பங்குபற்ற மறுத்துவிட்டது. ரூஷியாவுடன் சேர்ந்துள்ள கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், ரூஷியாவின் தூண்டுதலின் பேரில் இத்திட்டத்தைப் பகிஷ்காரம் செய்துவிட்டன. மேற்கு ஐரோப்பிய நாடுகள் இத்திட்டத்தைப் பரிசீலனை செய்வதற்காக ஓர்மகாநாடு கூடியிருக்கின்றன. இம்மகாநாடு இப்போது பாரிஸ் நகரிலே கூடியுள்ளது. பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி அம்மகாநாட்டுக்குத் தலைமைவகித்தார். இங்கிலாந்து, பிரான்ஸ், இற்றலி, துருக்கி முதலாம் 14 நாடுகள் இம் மகாநாட்டிற் பங்குபற்றியுள்ளன.

இந்திய அரசியல்

இந்திய சுதந்திர மசோதா

சட்டபூர்வமாகி விட்டது

இந்திய சுதந்திர மசோதா

இந்திய சுதந்திர மசோதா மூன்றாம் முறையாகவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துப் பொதுமக்கள் சபையிலும் பிரபுக்கள் சபையிலும் நிறைவேறிவிட்டது. இனி அது சட்டபூர்வமாகிவிடும். இந்த மசோதாவைப்பற்றிப் பிரிட்டிஷ்பிரதமர் அட்லி வியாக்கியானம் செய்கையில், ஆகஸ்டு மாதம் 15ந்திகதி இந்தியாவும் பாகிஸ்தானும் பரிபூரண சுதந்திரநாடுகளாகின்றனவென்றும், அவற்றின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய நிபந்தனை எதுவும் இந்த மசோதாவிற் சேர்க்கப்படவில்லை என்றும் கூறினார். இன்னும், அந்தமான், நிக்கோபார், லக்கடீவ் என்னும் இந்து சமுத்திரத் தீவுகள் முன்போல இந்தியாவுடன்தானிருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார். இதன்பின்னர்ப் பேசிய அற்றோணி ஜெனரல் சேர் ஹார்ட்லிஷாக்ரொஸ், "சமஸ்தானங்கள் ஒன்றில் பாகிஸ்தானுடன் அல்லது இந்தியாவுடன் சேர்வதுதான் நல்லது. ஆகஸ்டுமாதம் 15ந திகதி அதிபத்திய அதிகாரம் நீங்கியவுடன் சர்வதேச அரங்கத்தில், சமஸ்தானங்களின் அந்தஸ்தை அங்கீகரிக்க பிரிட்டனுக்கு உத்தேசமில்லை" என்று தெரிவித்தார்.

○

அரசியல் நிர்மாணசபை

அரசியல் நிர்மாணசபையின் கூட்டம் சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாகி நிகழ்ந்து வருகிறது. முஸ்லிம்லீக் அங்கத்தவர்களும், சமஸ்தானங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றின [illegible] மானவர்கள்; [illegible] லீக்கர் சுதந்திர இந்தியாவிலே சதா பிளவுண்டாகவே முயற்சி செய்வர் மிஸ்டர் இஸ்மெயில் சுந்திரிகர் (இவர் இடைக்கால அரசாங்கத்தில் ஓர் மந்திரியாகவும் இருப்பவர் சமஸ்தானப் பிரதிநிதிகளில், சேர் ஏ. இராமசாமி முதலியார் (மைசூர்) ஸ்ரீஜாஸ் எம் எஸ் ஆனே (தெக்ஷண சமஸ்தானங்கள்) ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீனிவாசன் (குவாலியர்) என்பவர்கள் முக்கியமானவர்கள். சர்தார் பல்தேவ் சிங்கும் பிரசன்னமாயிருந்தார். டக்டர் பீ ஆர் அம்பேத்கார் முந்தி வங்காளப் பிரதிநிதியாக இருந்தனர்; அம்மாகாணம் பிரிக்கப்பட்டதும் தம் பதவியை இழந்தார். ஆனால், அவரைக் காங்கிரஸ், பம்பாயிலிருந்து போட்டியில்லாமல் தெரிந்தனுப்பியிருக்கிறது.

○

லீக்கரை அகற்றவேண்டும்

ஹிந்து மாகாணங்களில் உள்ள முஸ்லிம்லீக் பிரதிநிதிகள் இப்போது அரசியல் நிர்மாணசபையிற் பங்குபற்றத் தொடங்கிவிட்டனர். இவர்கள் இப்படிப் பங்குபற்ற உரிமையுடையவரானென்று ஸ்ரீமதி சருணா அசாப் அலி ஓர் ஆட்சேபனை கிளப்பியிருக்கிறார். அவர் கூறுவதாவது: "லீக்கர் தம்முடைய அதிகாரபீடத்தின் கட்டளைப்படி இதுவரை, இந்த அரசியல் நிர்மாணசபையிற பங்கெடுக்கமுன்வரவில்லை. இப்போதுதான் இங்கே வந்துள்ளார்கள் இந்தியாவின் சுதந்திரத்துக்குப் பாரம விரோதிகளின் ஏஜெண்டுகள் இவர்கள். ஆகவே, இந்த அரசியல் நிர்மாணசபையில் இவர்கள் எங்கள் சத்துராதிகளின் உளவாளிகளாகவே இருப்பர். இந்திய தேசிய இயக்கத்தில் வைரிகளான இந்த லீக்கரை அகற்றவேண்டும்" என்பது கிண்ணம். எனவே இவர்களை அந்நியர் எனக் கருதி, இவர்கள் இந்தச் சபையிற் பங்குபற்றுதலைத் தடுக்கவேண்டும். அரசியல் நிர்மாண சபையிலே முஸ்லீம் ளும் அங்கத்துவம் பெறவேண்டுமானால், இந்த லீக்கரை விலக்கி, இவர்களிடத்துக்கு, கூட்டுத் தொகுதி முறையை ஆதாரமாகக் கொண்ட தேர்தல்களை ஏற்படுத்தி, அவற்றின்மூலம் முஸ்லிம்கள் அங்கத்துவம் வகிக்க இடம் கொடுக்கவேண்டும். இப்படி நாம்செய்யாவிட்டால் ஹிட்லர் அன்று செக்கோஸ்லோவாக்கியாவில் சூடேற்றன் பிரச்சினையைக் கிளப்பத் தம் ஐந்தாம் படையினரைத் தூண்டியவாறு ஜின்னாசாயும் இந்த லீக்கர்மூலம் எங்கள் சுயேச்சைக்குப் பங்கம் தேட முயற்சிப்பார்."

○

ஜின்னாவின் ஏமாற்று வித்தை

பாகிஸ்தான் டொமினியனின் "கவர்னர் ஜெனரலாக ஜின்னாசாயுடன் தன்னைத்தான் நியமித்தது சம்பந்தமானவிபரங்கள் இப்போது மெல்லமெல்லவாக வெளிவருகின்றன. பாகிஸ்தான், இந்தியா என்னும் இரு டொமினியன்களுக்கும் யார்யாரை கவர்னர் ஜெனரலாக நியமிக்கலாம் என்ற பிரச்சினை, இராஜப்பிரதிநிதிமவுண்ட்பேற்றன் பிரபுவுடன் விவாதிக்கப்பட்டது. இரு டொமினியன்களுக்கும் பொதுவாக ஒரே "கவர்னர் ஜெனரல்" இருப்பதுதான் மேல் என்று இருபகுதியாரும் சம்மதப்பட்டனர். அதனபடிக்கு காங்கிரஸ் அதிகாரபீடம் மவுண்ட்பேற்றனை நியமிக்க வேண்டும் என்று சிபார்சு செய்தது. ஆனால், ஜின்னா இராஜப் பிரதிநிதியை விட்டகன்றதும் தம் சகாக்களை அழைப்பித்துச் சதியாலோசனை செய்தார் என்று கூறப்படுகிறது. தம்மைக் கவர்னர்ஜெனராலாக நியமித்தால், முதலாவது தன்னுடைய சுயநலம் பூர்த்தியாகும் என்பதை உணர்ந்தார். அத்துடன், இந்தியாடொமினியனுக்கு வந்தும், ஓர் ஆங்கிலேயரையேதன்கவர்னர் ஜெனரலாக வைத்திருக்க, பாகிஸ்தான் ஓர் சுதேசியை கவர்னர்ஜெனரலாக்கினால்

தொடர்ச்சி 5ம்பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனாகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன்எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஈப்போ ரோட்
சேண்டல்
கோலாலம்பூர்.

தத்தி: "நேதாஜி" கோலாலம்பூர்
Mis 77 7-7-47 to 5-8-47.

விளம்பரம்

கிருஷிக இலாக்கா மாட்டுப்பண்ணையில் காட்டு மாங்கள் அரிவதற்கு விரும்பியவர்கள் தங்கள விண்ணப்பப் பத்திரங்களை இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் கந்தோருக்கு 1947ம ஆண்டு ஆடிமாதம் 25ம் திகதி மத்தியானம் 12 மணிக்குள்ளாக அனுப்பப்பட்டவேண்டும். உங்கள் விண்ணப்பம அனுப்பும்பத்திரங்களில் உங்கள் கேள்வகளை விபரமாக எழுதல் வேண்டும்.

மாங்களை வெட்டி விழுத்தவும், ஏற்றிக் கொண்டுபோய் மரம் அரியுமிடத்தில் பறிக்கவும், ஒரு சதுரஅடி அரியவும், வரமுள்ள மாங்கள் அரியவும் வைரமில்லாத மாங்கள் அரியவும் வெவ்வேறாக விபரம் கொடுக்கப்படவேண்டும்.

பத்துரூபாய்க்கு கச்சேரி அல்லது ரெசரி ரசீட் ஒன்று இக்கந்தோருக்கு அனுப்பி விண்ணப்பம் நிரப்பி அனுப்பும்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

முழு விபரங்களுக்கு 1947ம் ஆண்டு ஆடிமாதம்...ம் திகதி வெளிவரும் அரசாங்க கசேட்டை பார்க்கவும்.

எஸ். கே. துரைசிங்கம்,
வடபகுதி கிருஷிகத் தலைவர்

கிளிநொச்சி, 28-6-47.
G 63 15, 18 7-47.

சீனத்தின் தலைவலி

15 ஆண்டுகளுக்குமேலாகச் சீனத்தைப் பீடித்த தலைவலி இன்னும் ஒழிபவிலலை உள்நாட்டுக் கலகம் இதுவரை ஒழிந்தபாடில்லை சமதர்மிகள் மத்திய அரசாங்கத்தினின்றும் பிரிந்து ஓர் சுதந்திர அரசாங்கத்தை நடத்திவருகின்றனர். அவர்களுக்கும் மத்திய அரசாங்கத்துக்கும் நடந்துவரும் போராட்டம் வரவர மும்முரமாகின்றது. சமதர்மிகள் சூங்கோவ் என்னும் ஓர் கேந்திர ஸதானத்தைக் கைப்பற்றிவிட்டனர். மத்திய அரசாங்கப் படைகள் இன்னோர் யுத்தமுனையில், சமதர்மிகளிடம் இரண்டு பிரதான இடங்களைக் கைப்பற்றிவிட்டனர்.

துருக்கிக்கு அமெரிக்க உதவி

துருக்கிக்கு 10 கோடி டாலர் பெறுமதியான யுத்த தளவாடங்களை அமெரிக்கா கொடுத்திருக்கிறது. இதற்கான உடன்படிக்கை சென்றவாரம் துருக்கித் தலைநகரத்திலே செய்யப்பட்டது. இந்த யுத்த தளவாடங்களைத் துருக்கி தனது சொந்த விஷயத்துக்கே உபயோகிக்கவேண்டும்; அத்தளபாடங்களை அமெரிக்காவின் அநுமதியின்றி வேறெந்த நாட்டுக்கும் உதவக் கூடாது என்பன இந்த உடன்படிக்கையிற் காட்டப்பட்டுள்ள ஷரத்துக் ளிற் சிலவாம் டார்டனல்ஸ் ஜலசந்தியைப் பலப்படுத்தி சோவியத் ருஷியாவின் செல்வாக்குப் பரவாமல் இருப்பதற்கே அமெரிக்கா துருக்கிக்கு இந்த உதவியைச்செய்திருக்கிறது.

ஸ்ரீஜூத் கிரிக்கு உபசாரம்

இலங்கை இந்கியக் காங்கிரசின் யாழ்ப்பாணக் கிளை ஸதாபனத்தின் ஆதரவில், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீஜூத் வி. வி கிரி அவர்களை உபசரிப்பதற்காக, வருகிற ஞாயிற்றுக்கிழமை (20-7 47) பிற்பகல் 5 மணிக்கு, வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய மண்டபத்தில் ஓர் கூட்டம் நடைபெறும் என்றும், அதில் ஸ்ரீமான்கள் வி. குமாரசுவாமி, த. முத்துச்சுவாமிப்பிள்ளை டக்டர் வீ. கனகையா, K. A. சுப்பிரமணியம், P. T. மதராஸ், ஸ்ரீமதி P. S. பிள்ளை என்பவர்கள் பேசுவர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

கேகாலைப் பதியில் சென்ற வாரம் நடைபெற்ற ஓர் தேர்தற் கூட்டத்தில், மிஸ்டர் எஸ டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா பேசுகையில் சமசமாஜீகள், சமதர்மிகள் என்னும் இடதுசாரிக்கட்சியின் அரசியற் கொள்கைகளைக் கண்டித்தார். ஹிந்துக்கள், பௌத்தர்களைப் பெரும்பான்மையின ராகக் கொண்ட இந்நாட்டிலே நாஸ்திகத்தை வளர்த்து மக்களின் ஆராதநுட்டானங்களைக் கெடுப்பதே இவர்களின் நோக்க மென்று அவர் சுட்டிக் காட்டினார்,

UNION CARNIVAL AND EXHIBITION
TENDER NOTICE
அறிவித்தல்

ஆகஸ்டு மாதம 6-ம் தேதி தொடக்கம் 16-ந் தேதி வரைக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும யூனியன் களியாட்டவைபவத்தில் ஒரு தாவர போசனக் கடை வைக்க விரும்புவோர் தமது கேள்விப் பத்திரங்களை எனக்கு அனுப்பலாம். கேள்விப்பத்திரங்கள் யூலாய் மாதம் 25ம் தேதி பகல் 12 மணிக்கு முன்பு எனக்குக் கிடைக்க வேண்டும். இந்தக் கடைக்கு ஆதரவு அதிகம் இருக்கும். ஒன்று பெருந்தரளான சனங்கள் களியாட்டவிழாவிற்கு வருவார்கள் மற்றது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிற் றிருவிழாவும் இந்த நாட்களிலேதான் நடைபெறும்.

I. P. துரைரத்தினம்
காரியாதிகாரி

தெல்லிப்பளை
யூலாய் 15, 1947
Mis 87 18-7-47

திருச்சி ரேடியோ

சனி யூலை 19

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பழனி ஜி வெங்கடராமையர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 ஏ எஸ் மஹாதேவன் பாட்டு 8.30 சித்திரகானம் இசைத்தட்டு 9 ஒலிபரப்பு முடிவு

1 பழனி ஜி வெங்கடராமையர் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைகளுக்கு 2-15 கே ஆனந்தா பாட்டு 2-45 முடிவு

மாலை 5 கே ஆனந்தா பாட்டு 5-40 அருட்பா திருவந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7. ஏ எஸ் மகாதேவன் பாட்டு 7.15 கூட்டுறவு ஸ்தாபனங்களும் மருஜி சிப்பாய்களும் 7-30 தமிழில் செய்திகள் 7-45 எஸ் ஸ்ரீனிவாசன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நூல் வணி 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை 9.45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டுவாத்தியம் 10 இசைவேளை 10-30 முடிவு.

ஞாயிறு யூலை 20

காலை 7-15 சிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 கே வி பக்கிரிசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 மைசூர் டி சௌடையா வயலின் 8-30 ரத்னாபாய் நாகராசன் வீணை 9 முடிவு.

12 நாம் இருவர் 12.30 யார் இவர்? 12-40 மின்னுவதெல்லாம் பாடல் 12.45 கிடைக்காத கடிதங்கள் 12-55 தேன்கூடு ஒலிச்சித்திரம் 1 மணிமலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி வி நமசிவாயம் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 கே வி பக்கிரிசாமி பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ரத்னாபாய் நாகராஜன் வீணை 7-30 தமிழில் செய்திகள் 8-45 திரைப்பட விமர்சனம் 8 கோலார் ராஜம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 டி கே பட்டம்மாள் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானுலை 9.45 டி ஜி சங்கர கோபாலன் புல்லாங்குழல் 10 இசைவேளை 10-30 முடிவு.

திங்கள் யூலை 21

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 விளநகர் வி நாராயணசாமி நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில செய்திகள் 8-15 புதிய பாடல்கள் அ இ ரே விதவான்கள் தயாரிப்பு 8-30 எஸ் ஆர் வைத்தியநாதன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் ஆர் வைத்தியநாதன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் ஆர் வைத்திய நாதன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 விளநகர் வி நாராயணசாமி சகோதரர்கள் நாகஸ்வரம் 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சேலம் ஜி தேசிகன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால் பெட்டி 8 சேலம் ஜி தேசிகன் பாட்டு 8-30 நாட்டுப் பாடல்கள் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9 45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10 வீணை இசை இசைத்தட்டு 10-15 மதுரை மணி ஐயர் இசைத்தட்டு 10 30 முடிவு.

செல்வாய் யூலை 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கே ஸ்வாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல் வகை இசைத்தட்டு 8-30 நாகர்கோயில் ஜே ராப்ராஜ் புல்லாங்குழல் 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 நாகர்கோயில ஜே சாம்ராஜ் புலாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 எஸ் கே ஸ்வாமி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 தாளவாத்யக் கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 எம் கே தியாகராசபாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 வாத்ய இசை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

அன்புநெறி

1-ம் பக்கத் தொடர்ச்சி

யை எய்தினாலும், அது பூர்த்தி பெற வேண்டின். அனுபவ உண்மையாக வேண்டின், எல்லா உயிர்கட்குப் (தன்னயமென்னும்) வழுவிலாததொண்டு செய்தலில் அவன்ஈடுபடல்வேண்டும். ஆக, சமூக சேவையால் ஞானநெறி பக்திநெறி தொண்டுநெறி (அல்லது தருமநெறி)யெனும் மூன்று நெறிகளின் இலக்ஷியங்களும் அடையப்படுகின்றன. அதாவது, சுய முத்தியும் ஈசனது காட்சியும் லோகஸங்க்ரஹம் எனும் உலக க்ஷேமமும் கைகூடுகின்றன.

"முற்காலத்திலே தனக்கென வாழாது பிறர்க்கெனவே வாழும் பெருநெறிக்குத் தீபமபோல விளங்கினார் காந்திதேவர். அவர் வேண்டிய வரமாவது:— 'நான் ராஜ்யத்தை விரும்பவிலலை, மீண்டும் பிறவாநிலையாகிய முத்தியையுங்கூட விரும்பவில்லை. நான் வேண்டுவது ஒன்றே: துயரநெருப்பால் வாடும் உயிர்களின் துன்பத்தை ஒழித்தலையே வேண்டுகிறேன்" என்ன தீரம்! என்ன துய அன்பு! என்ன விரக்தி! தற்காலத்திலே ஸ்ரீ சுவாமி விவேகாநந்தர் "ஏழை மக்களும் துரப்படுவோரும் நசுக்கப்பட்டோரும் எனது நாராயணன். (அந்த தெய்வத்தின் குழந்தைகட்குப் பக்தியோடு தொண்டு செய்வதன் மூலமாக யான் அத்தெய்வத்தை உணர்வேனா!' என்றார்; நாட்டுப் பணிக்காக, ஜனசமூகத்தின் சேவைக்காக, தமது உடல் பொருள் ஆவிகளையுங் முத்தியையும் அவர் தத்தம்பண்ணினார். சான்றோர் ஊட்டிய இந்த சமூகசேவையெனும் தீ மக்களது உள்ளங்களிற்பற்றிக் கொழுந்துவிட்டெரிவதாக!

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
காலஞ்சென்ற காரைதீவு சிழக்குக்குடி
பரமு தில்லையம்பலத்தின் தத்துவம்.
இறந்தவர்
தத்துவ இல 352
காரைதீவு சிழக்கு பரமு குமாரவேலு
—தத்துவகாரன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 352 ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1947-ம் ஆவணி மீ 13ந் திகதி புதன்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக்கோவிற்பற்று வலந்தலையிறை கோம்பையட்புலம் பர. நெல். இலா. (14½) பதினாலரை. இதற்கு எல்லை கிழக்கும் மேற்கும் கந்தையா மகள் பரமேஸவரிக்கும் பங்காளருக்கு முரியவாதனம். வடக்கு சப்பிரமணியம் பெண் சுந்தரத்தினுதனம. தெற்கு மு. அம்பலவாணருக்குரிய ஆதனம். இதிற் சொரியலாய் நாலிலொரு பங்கு.

2 மேற்படி வலந்தலை களபூமியிறை சடையாழி பர. நில. இலா. (27)இருபதேழு. எல்லை கிழக்குப் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் வடக்கு ஆறுமுகம் வேலுப்பிள்ளைக்குரிய வாதனம். மேற்கு சுந்தரேசுவரசுவாமி கோவிலுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு ஒழுங்கை, முகப்பும் வினாசித்தம்பி முருகேசுவுக்கும் மறுபேருக்கு முரிய வாதனமும் இதிற் சொரியலாய் நாலிலொரு பங்கு (¼).

3 மேற்படி காரைதீவு மேற்கு 'பலியன்' பர. நெ. இலா. பதது (10) எல்லை கிழக்கு அருணாசலம் முருகேசு வினாதனம், வடக்கு முருகேசு பெண் வள்ளியம்மையினாதனம், மேற்கு சங்கரப்பிள்ளை கைப் பெண் தங்கமுத்துவி னாதனம் தெற்கு சீதேவியினாதனம். இதிற் சொரியலாய் பன்னிரண்டிலொருபாகம்.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்
12—7—47.
Mis 83 18-7-47

உ
சுகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்
திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பேரம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1-7-47 30-9-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

மீண்டுவந்து சிவபாக்கியம் உறங்குவதைக் கண்ணகியம்மைக்கும் பாக்கியலட்சுமிக்குஞ் செ லலிவிட்டு அங்கேதானே உலாவிக்கொண்டு திரிந்தான்; நேரம் 6-30 மணிவரையிலிருக்கும், பூரணை நிலாவோடு கூடிய இரவு; சந்திரோதயத்தைப் பார்த்துக் கண்ணகியம்மையும் பாக்கியலட்சுமியும் அக்காட்சியைப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தனர்; அவர்களிருக்குமிடத்திற்குச் சிறிது தூரத்தில், ஒரு தமிழ்மகன் கௌபீரமான தோற்றமுடையவன், அயிரோப்பிய உடை தரித்தவண்ணம் ஒரு சார்மனை நாற்காலியில், வாயிற் 'சிகரற்" கௌவிப் புகைத்தபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான்; இராமன் அந்த ஆளிருக்கு மிடத்திற்குச் சமீபமாகப் போதலும், அந்த ஆள், "இராமனை இப்படி வாரும்" என்று கூப்பிட, அவன் அந்த ஆள் முன்னிலையிற் போய் நின்றான்: "நீர் எந்த ஊருக்குப் போகிறீர்; அதிலிருக்கும் அந்த அம்மையாருக்கும் மற்றவர்களுக்குந் துணையாக வருகிறீரோ, அந்த அம்மையார் எனக்கு அறிமுகமானவர்போற் புலப்படுகிறது" என்று பல கேள்விகளைக் கேட்டார்; இதற்கிடையில் ராமன் கையில் அந்த ஆள் ஒரு சிகறற்றைக் கொடுக்க, அவன் நன்றிகூறி வாங்கிப் பற்றவைக்காது கையில் வைத்துக்கொண்டு 'ஐயா, அந்த அம்மாளும் பிள்ளைகளுஞ் சிங்கப்பூருக்குப் போகிறார்கள்; நான அவர்களுக்குத் துணையாக வந்தேன் அவர்கள் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அந்த ஆச்சியின் பெயர் கண்ணகியாச்சி யென்று சொல்லுவார்கள் நான் பெரியம்மா என்றே கூப்பிடுகிறேன்...." எனலும், 'நல்லது, உம்முடைய பெயரென்ன" என்று அந்தமனுஷன் கேட்க, என்பெயர் திரு. இராமசாமிப்பிள்ளை; ஆனால், என்னை எல்லாரும் இராமன் என்றுதான் கூப்பிடுகிறார்கள்" எனலும், அந்த ஆள் சிரித்துக்கொண்டு, 'அந்தப் பெரியம்மாளின் பக்கலில் இருக்கும் பிள்ளை அந்த அம்மாளின் மகளா, பெயரென்ன" என்று வினவ, 'ஓ, அந்தப்பிள்ளையும், ஒருமகளதான்; பெயர் பாக்கியம்; நான் சின்னம்மா என்று அழைப்பது" என இராமன் விடை சொன்னான்; "என்ன நோக்கமாகச் சிங்கப்பூருக்கு இப்பொழுது இவர்கள் புறப்பட்டிருக்கிறார்கள்" என்று அந்த ஆள் கேட்க, "சிங்கப்பூரில் இந்த ஆச்சியினுடைய மகன் உத்தியோகமாகவிருக்கிறார் அவர் வெகு காலம் ஊருக்கு மீண்டுவரவில்லை; வரும்படி இவர்கள் காகிதமெழுதிய போது அவர் தமக்கு இப்பொழுது விடுதலை கிடையாதென்றும், ஆனதால் தாயாரும் சகோதரியும் அங்கு வந்தால் நல்லதென்றும் தெரிவித்தாராம்: அதனாலேதான் ஐயா, இவர்கள் இப்பொழுது அங்கே புறப்பட்டுப் போகிறார்கள்" என்றான்; "அப்படியா மிகவும்நல்லது; அவர்களுக்கு என்னை விளங்காவிட்டாலும் நான் அவர்களை அறிவேன்; இந்தநேரத்தில் அவர்களுக்கு ஏதுந் தேவையென்றால் நான செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று அந்த ஆள் சொல்ல, "அப்படி ஏதும் உதவி வேண்டுமென்று நான் நினைக்கவில்லை சகல ஆயத்தங்களோடும் பயணம் புறப்பட்டிருக்கிறார்கள்; இருந்தாலும் அந்த ஆச்சியை வேணுமானால் போய்க் கேட்கிறேன்" என்று இராமன் சொல்ல, "போய்க் கேட்டுவந்து சொன்னால் நல்லது" என்று அந்தஆள் சொல்ல, இராமன் உடனே கண்ணகியம்மையும்பாக்கியலட்சுமியுமிருக்குமிடத்திற்போய் விபரம் முழுவதையுஞ்சொல்லி, அவர் கேட்கச்சொன்ன விஷயத்தையுங் கேட்டான்; "ஆரோ, நம்மையறிந்தவராக விருக்கவேண்டும்; இப்பொழுது எங்களுக்கு ஒன்றும் வேண்டியதில்லை, தேவையானவேளை தெரிவிக்கலாம்; கேட்டதற்கு நமஸ்காரம் என்று அவரிடம் போய்ச் சொல்லு" என்று கண்ணகியம்மை சொல்ல, இராமன் அப்படியே போய் அந்த ஆளிடஞ் சொல்ல கண்ணகியம்மையும் பாக்கியலட்சுமியும், சிவபாக்கிய மிருக்கு மிடத்திற்குப் போயினர். (வரும்)

தேகவிநோதம்

வழக்கறிஞர் கதிரவேற்பிள்ளை

பீ. ஏ. தம்பி என்னும் புனைபெயரோடு வழங்கிய வண்ணார்பண்ணை வழக்கறிஞர் திரு. வீரவாகு கதிரவேற்பிள்ளையவர்கள் தம்மைச் சிலநாட் பீடித்து வருத்திய நோய் காரணமாக, சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் மூன்றரை மணியளவில், தமது மக்கள், பேரப்பிள்ளைகள் சுற்றமித்திரர் அநுதாபமுற இவ்வுலகவாழ்வை யொருவினர்; இறக்கும்போது இவருடைய வயசு 95 வரையிலிருக்குமாம். இவர் வண்ணார்பண்ணையில் உயர்ந்த கல்வி செல்வஞ் செல்வாக்குடைய குடும்பத்திலே பிறந்தவர்; பிரபல வழக்கறிஞராய் அக்காலத்திலிருந்த பிறவுன் சின்னத்தம்பி யவர்கள் இவருடைய பெரியத்தையார்; திருவாங்கூரில் நீதியரசராக விளங்கிய திரு. T. செல்லப்பாபிள்ளை, திரு. டொன்னம்பலபிள்ளை யென்னு மிவர்களுடைய சகோதரியே இவரது மனைவியாவர். முதன்முதல் யாழ்ப்பாணப் பட்டினத்திலே சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தாரின் பீ. ஏ. பரீட்சையிற் சித்தியடைந்தவராதலின், அன்றுதொட்டு பீ ஏ த்தம்பி என எவராலும் அழைக்கப்பட்டு வருவாராயினர்; வண்மேற்கில் இவருடைய இல்லமிருக்கும் மார்க்கமாகச் செல்லும் ஒழுங்கையும் பீ ஏத்தம்பி யொழுங்கையென வழங்கப்படுகின்றது; சென்ற 1892 ம் ஆண்டில் இவர் சுப்பிறீம்கோட் பிறக்டராகப் பதிவுசெய்யப்பெற்றுச் சிலகாலங் கொழும்பு நீதித்தலங்களிலும் பின்னர் யாழ்ப்பாணத்தி லுள்ள நீதித்தலங்களிலும் அதிக திறமையோடு கருமமாற்றி வந்தார்; வழக்கறிஞர் என்பதோடு மாத்திரமமையாது, இவர் கணக்குப் பதுதி ஆங்கில மொழியிற் றேர்ந்த நிபுணராவர்; அக்காலத்திலே கற்றோர் பெரியோர் சிநேகம் இவருக்கு அதிகமுண்டு; இப்பொழுது சீவந்தராயிருக்கும் இவருடைய மக்கள் டக்டர் பரமநாயகம், திரு வேதநாயகம், அழகுசடைநாயகம், திரு. T. P. மாசிலமணிப்பிள்ளையின் மனைவியார், திரு V. ஆசைப்பிள்ளையின் மனைவியார், திரு ஓங்காரவடிவேலவர்களின் மனைவியார் என்னு மிவர்களாவர். பௌத்திர பௌத்திரிகள் பலருளர். காலங்கண்ட முதியோராகிய இவருடைய ஈமக்கிரியைகள் அடுத்தநாளாகிய புதன்கிழமை, புதல்வரால் வண்ணார்பண்ணை கோம்பயன்மணல் மயானத்திற் பல சுற்றமித்திரர் சமுகத்திலே சிறப்புறச் செய்யப்பட்டன; திரு. கதிரவேற்பிள்ளை யவர்களுடைய ஆன்மா சாந்தியடைக.

ஆனைக்கோட்டையில் உபதபாற்கந்தோர்

இம்மாதம் 16 ந் திகதி காலை 8 மணிக்கு ஆனைக்கோட்டை கூளாவடியில் ஓர் உபதபாற்கந்தோர் திரு. S. சுந்தரம்பிள்ளை R. P. M. அவர்களால் திறக்கப்பட்டது. அத்தருணம் பல பிரமுகர்கள் வந்திருந்தனர். திருவாளர்கள் S. செல்லையா (விதானை) அவர்கள், S. சுந்தரம்பிள்ளை அவர்கள், வைத்தியர் P. அம்பலவாணர் அவர்கள், ஆசிரியர் T. சின்னத்தம்பிஅவர்கள்முதலியோர்சொற்பொழிவாற்றினர்கள் இனியும் எமது நாட்டுக்கு ஒரு வைத்தியசாலை அமைத்துத்தரவேண்டு மென்று அரசாட்சியாரைக் கேட்கவேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டதும் தேவாரத்துடன் சுந்தரம்பிள்ளையவர்கள் கதவைத் திறந்தார் சிற்றுண்டியுடன் கூட்டம் கலைந்தது.

மன்னார் தமிழாசிரியர் சங்கம்

மேற்படி சங்கத்தின் ஆதரவில் விடுமுறைக் கழக நிகழ்ச்சித் திட்டம் 17-7-47 ல் திரு. ஜே. தியாகராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சிறந்த சங்கீதக் கச்சேரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கட்டடநிதியின்பொருட்டு

இந்திய தேசியராணுவப் பெண்கள்பகுதிக் காரியதரிசியாகிய

குமாரி S. N. சரசுவதியும்

அவர் கோஷ்டியினரும்

1947-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 7 ந்உ சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில்

நீதியரசர் கௌரவ ஸ்ரீ

C. நாகலிங்கம் அவர்கள் அநுசரணையில்

சிறந்த சங்கீதக்கச்சேரி நடத்துவர்

சங்கீத ரசிகர்கள் இவருந்தருணத்தை இழந்துவிடாது சமுகஞ்செய்க

Mis 88 18—1-8 47.

இந்திய சுதந்திர மசோதா

3—ம் பக்கத் தொடர்ச்சி)

நடமேற் செல்லப்புறத்துப் பட்டாணி யரை சுயராச்சியம் என்றும் ஜின்னாவும் அவர் சகாக்களும் தீர்மானித்தே இந்தத் தீர்மானத்தைச் செய்தனர் என்று தெரிகிறது.

○

பிரான்சிய இந்தியா

இந்தியாவிலே நீடித்தகாலம் பிரான்ஸியரின் பரிபாலனத்திலுள்ள ஊர்கள் புதுச்சேரி, காரைக்கால், சந்தரநாகூர், மாகே, யானம என்னுங் ஐந்துமாம். இவ்வூர்களிலுள்ள குடிசனத்தின் தொகை மூன்றுலட்சமாகும்; பிரிட்டிஷ் இந்தியா சுயராச்சியம் பெறுந்தினமாகிய, வருகிற ஆகஸ்ட்மாசம் 15ந் திகதிக்கு முந்தியே பிரான்ஸியரும், பிருத்தானியரைப் பின்பற்றித் தங்கள் அதிகாரம் முழுவதையும் பிரான்சிய இந்திய காங்கிரஸ மகாநாட்டினரிடம் குறித்த ஊர்களின் பரிபாலனத்தை முறையாக உடனே ஒப்புவித்துவிட்டுப் போய்விடவேண்டு மென, மேற்படி பிரான்சிய இந்திய காங்கிரஸ மகாநாட்டுத் தலைவர் இப்பொழுது பாரிஸ் நகரிலுள்ள பிரான்ஸிய அதிகாரிகட்குத் தெரிவித்துள்ளார். பிரான்ஸிய இந்திய காங்கிரஸ் மகாநாட்டுத் தலைவர் இவ்விஷயமாகப் பின்வரும் நியாயங்களை பிரான்ஸிய அதிகாரிகட்கு எடுத்துக்காட்டியுள்ளார்:

"பிரிட்டிஷ் இந்தியாவில்வசித்துவரும் இந்தியமக்களின் வாழ்க்கைமுறை கொள்கைகள் கல்விவிருத்தி பொருள் விருத்தி என்னு மிவைகளிற்கொண்ட ஆர்வம், சுதந்திர விடாய் முதலிய விஷயங்களுக்கும் பிரான்ஸிய இந்தியர் கொண்டுள்ள மேற்படி வாழ்க்கை கொள்கை விருத்தி அபிமானமென்னு மிவைகளுக்கு மிடையிற் பேதமில்லை இரு பரிபாலனத்திலுள்ளவர்களும் ஒரே நோக்கங் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்; பிரிட்டிஷ் இந்தியர் சுயாதீன வாழ்வடையும்போது, பிரான்ஸிய இந்தியர்மாத்திரம் அடிமை வாழ்வோடு அடங்கியிருத்தல் முடியாது; ஆதலால் பிரான்ஸிய இந்தியருக்கும் சுயராச்சியம் உடனே கொடுக்கப்படல்வேண்டும்" என்பதாம் இது சம்பந்தமாக பாரிஸ நகரிலுள்ள பிரான்சிய அதிகாரிகளின் கேள்விப்படி பிரான்சிய இந்திய தேசாதிபதியாகவுள்ள M. பரன் என்பவரைப் பிரான்ஸியர் கூப்பிட அவர் பாரிஸிற்குப் போயிருக்கிறாராம்.

புத்தளம் கதிர்வேலாயுதர் மகோற்சவம்

புத்தளநகர் சேனைக் குடியிருப்பு "பெரியவில்" நீர்நிலையத்துக் கருகாமையாய்த் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில சத்திவேல் உற்சவம் நிகழும் சர்வசித்து வருடம் ஆடி மாதம் 7 ந்திகதி (23-7-47) புதன்வாரம் முதல் ஆரம்பமாகி ஷை மாதம் 17-ந் திகதி (2-8-47) சனிவாரம் திருவோண நட்சத்திரத்தன்று முடிவுறும்.

பரிசளிப்பு விழா

நிகழும் சர்வசித்து வருஷம் ஆடிமாதம் 19-ந் தேதி (3-7-47) வியாழக்கிழமை 5 மணிக்கு வடமராட்சிசைவமகளிர்வித்தியாசாலைசாலையில் உதவி வித்தியாகர்த்தராகிய திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள் தலைமையில் ஆரம்பமாயது அத்தருணம் மேற்படி பாடசாலை மாணவியால் வரவேற்புக் கூறப்பட்டது. பின் பிரதம ஆசிரியையால் அறிக்கை வாசிக்கப்பட்டது பின் ஸ்ரீமதி குணவர்த்தன அவர்களால் மாணவர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. திரு. அருணந்தி அவர்களால் ஓர் அரிய சொற்பொழிவும் நீதிபதி ஸ்ரீமான் குணவர்த்தனா அவர்களால் ஓர் அரிய சொற்பொழிவும் நடத்தப்பெற்றன. பாடசாலை முகாமைக்காரராகிய திரு. V. T. S. சிவகுருநாதன் அவர்களால் நன்றி கூறப்பட்டது. ஈற்றில் பாடசாலை மாணவர்களால் ஓர் ஆங்கில நடித்தலும், நடனமும், அரிச்சந்திர நாடகத்தின் ஓர் பாகமும், கண்ணன் நடனமும் காண்பிக்கப்பட்டன பின் தேவார பாராயணத்துடன் விழா முடிவு எய்தியது. —கடித

வாசகாலைத் திறப்புவிழா

13-7-47 ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணியளவில் மண்டைதீவு சன்மார்க்க சங்கத்தின் ஆதரவில் ஓர் இலவச வாசகசாலை மேற்படியூர் அரசாங்க வைத்தியர் திரு. வி. கே. செல்லையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின் ஓர் பொதுக்கூட்டம் மேற்படியூர் கார்த்தகேய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் திரு. மு. சதாசிவம்(மேற்படி சங்கத் தலைவர்) சபையோரை வரவேற்றதின்பின் திரு. க கயிலாசபிள்ளை கிராமச்சங்கத் தலைவர் அவர்களும் திரு. க ஏரம்பமூர்த்தி அவர்களும், பண்டிதர் சி. மருதநாயகம் அவர்களும், திரு. மு. நவரத்தினராசா (கிராம விதானை) அவர்களும், திரு சி. தியாகராசா ஆசிரியர் அவர்களும், திரு. வே. க. செல்லையா அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினர் பின் சமூகக் காரியதரிசிகள் திரு. கா. குமாரரத்தினம் அவர்களும், திரு. மு. பரமானந்தம் அவர்களும் சபையோருக்கு நன்றி கூறியதுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

காரைநகர்ச் சைவமகாசபை

நிகழும் சர்வசித்து வருஷம் ஆடிமாதம் 20-ந் திகதி (25 7.47) வெள்ளிக்கிழமை 4 மணிக்குமேல் சுந்தரமூர்த்தி நாயனாரது குருபூசை மேற்படிசபைக் கட்டட மண்டபத்தில் நடைபெறும் அவ்வமயம் ஆசிரியர் திரு. கு. செல்லையா அவர்கள் பக்வாத்திய சகிதமாக சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் விஷயமாகச் சிறந்த ககாப்பிரசங்கஞ் செய்வாரென மேற்படி சபைக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் செய்யவேண்டியன

1-ம் பக்கத் தொடர்ச்சி

●

நீங்கள் செய்யும் நன்மை தீமைகளே உங்களுக்குப் பின்னால் வருகின்றன. போம்பொழுது அருந்துணைபுரிந்த புண்ணியம்; தருமமே உங்கள் நண்பன். எனவே எப்பொழுதும் தருமம் செய்யுங்கள்.

●

கூரிய வாளும் கொடிய பாம்பும் ஒருவனது உள்ளத்தில் வாழும் கோபத்தைப் போலக் கொடியனவல்ல.

●

குடி, விபசாரம், சூதாட்டம், களவு, பொய் இவை ஆத்மாவை அழித்து ஒருவனைப் பெருந் துன்பநெறியில் செலுத்துகின்றன. எனவே இவற்றை அறவே ஒழிக்கவேண்டும்.

●

எல்லா உயிர்கள்மீதும் கருணையுடனிருங்கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்யுங்கள். உண்மை பேசுங்கள். ஆசைகளை அடக்குங்கள்.

●

பறவைபோல விடுதலையாகவாழுங்கள். நாளையைப் பற்றிச் சிந்தியாதீர்கள். கடவுள் எல்லோருக்கும் உடையும் உணவும் அளிக்கிறார்.

—லோகோபகாரி

சமய நிலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

னைத்தானே நேர்செய்து கொள்ளல் வேண்டும்" எனக் கூறிப் போந்தார். தன் ஆன்மாவைக் கட்டுப்படுத்தியவன், நிலத்துக்குக் கீழ் உள்ள பாழும் குழியிலே தள்ளப்படினும், அல்லது தனது இயல்புக்கு முற்றிலும் மூர்ணன கூட்டத்தில் வலிந்து சேர்க்கப்படினும், தன்னைத்தான் தேற்றி மனச்சாந்தி பெறக்கூடும். இது தான் நாமனைவரும் கசடறக் கற்கவேண்டிய கல்வியாம்.

'வாழ்க்கையின் ஒழுங்கு' என்பது மிகவும் வியத்தற்குரிய தொன்று தமக்குப் பிடிக்காத ஒவ்வொன்றையும் நீக்கிவிட முயல்வார்க்கு 'தன்னைத் தான் அடக்கியான் டின்புற்றிருத்தல்' என்பது இயலாது. கடினமாக இருப்பவற்றை யெல்லாம் நீக்கிக் கொண்டே யிருப்போமாயின், முன்னே நம் என்ற பாதையில் ஓடிகூட எடுத்து வைக்கும் ஆற்றல் பெறோம். இதுதான் நமது உள்ளாற்றலைத் தட்டி யெழுப்பும்.

—சுவாமி பரமானந்தர்.

வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருமுறைத்தல் விலை ரூபா 25
அரைமுறைத்தலுக்கு ரூபா 12-50
கால்முறைத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

தந்தரோக சஞ்சீவி கந்தசாமி வைத்தியர் சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு எவக்கக்கூடிய ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும் முரசவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6-48 (வெ)

விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், சண வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறே னென்பதையும், கட்டார் வைக்குரிய கண்ணாடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறே னென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் { காலை 9 மணிதொடக்கம் 12 வரை, மாலை 2 „ 5 „ }

T.t 28 11-7—10-10-47. S. சார்ல்ஸ்பத்திராஜ.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	„	3, 000, 000, 00
சேமநிதி	„	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம் - பிரிஸ்ரல்விதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (புதிய நகரண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.
வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std. 12 2-8—31 7-47) (F)

சென்னையிலிருந்து கப்பல் பிரயாணம்
மலேயாவுக்கு உங்கள் பிரயாணம் நிச்சயமா ?

எம்மால் சென்ற சில மாசங்களாக நாகபட்டணம் மார்க்கம் ஏற்பாடாகி யிருந்த பிரயாண வசதிகள் கப்பல்வரை திருப்திகரமா யிருந்தும் கப்பலில் வசதியீனங்களை யுணர்ந்த எமது நண்பர்கள் சௌகரியத்துடன் குடும்ப சமேதராகப் பிரயாணஞ் செய்வதற்கு ஏற்ற வசதிகளடங்கிய கப்பல் மாசம் ஒருமுறை சென்னையி லிருந்து புறப்படுவதற்கேற்ற ஒழுங்குகள் கைகூடுவதை அறியத்தருவதுடன் எம்மிடம் எந்த நேரங்களிலும் விபரம் பெறுதற்கேற்ப ஓர்காரியாலயம் ஸ்ரான்லிரோட்டில் நிறுவப்பட்டிருக்கிறது.

முன்போல் நாகபட்டணம் மார்க்கமும் வசதிகள் செய்யப்படும்

எஸ். ஆர். எஸ். நாதன்
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்

Std 23. 6-6-47—6-6-48

இப்பொழுது எங்கள் கைவச முள்ளன!

சுத்தமான "பிறேக்" எண்ணெய்
ஸிமொலி ஸ்மொலிஷ்
ஹோர்-பல்ப்ஸ்
குட்ஸ்யர் வால்-பெல்ற்ஸ் (FanBelts)
மின்சாரப் பொருள்கள்

டுக்கோஸ பிறே வர்ணங்கள்
"சைக்கிள்"கள்
சைக்கிள்களிற் தேவையான தனிப்பொருள்கள்
ரேடியோக்கள்
ரயர் ரியூப்கள்

T. N. லிங்கம் & ஸன்,

எவ்வகையான மோட்டார் வண்டிகளுக்கும் சைக்கிள்களுக்கும் தேவையான பொருள்களும் தனிப் பொருள்களும் கொடுப்பவர்கள்; மின்சாரப் பகுதிக் கன்ருக்டர்கள்.

தெலிவோன் இல. 108.
248, K. K. S யாழ்ப்பாணம்.
19-6-47 Std 23 24-6-47—22-7-47.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Friday, July 18, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org